

**புத்தக வாசிப்பு**

ஏடு எடுத்தேன் கவி ஒன்று எழுத!

என்னை எழுது என்று சொன்னது இந்தக் காட்சி

பூட்டிய பூட்டு என் அறியாமையைப் பற்றி எழுது என்றது

திறந்த பூட்டு என் புத்தக வாசிப்பைப் பற்றி எழுது என்றது

நான் எழுதுகிறேன் அறிவுப் பூட்டை திறப்பது புத்தகம் என்று

**கல்வி**

மாணவப் பருவத்திலே
கல்வி என்னும்
அறிவுப் பூட்டைத் திறந்திடு...
மதிப்பெண் பெற்றிடவே
பாடத்தைப் படித்திடு !
முயற்சியைத் தொடர்ந்து
மூளையிலே நிறுத்திடு !
சாவி கொண்டு பூட்டிடு !
எப்போதும் நினைத்து
ஏகாந்தமாய் இருந்திடு !
கல்வி என்னும்
அறிவுக் கண்ணைத் திறந்திடு

**அறிவுப்பூட்டைத் திற**

குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல
நாள்தோறும் எதை எதையோ எண்ணி
உனது பெருமைகளை இழக்கிறாய்.
காரணம் உன் அறிவுப்பூட்டு
இன்னும் திறக்கப்படாததே!
உன் அறிவுப்பூட்டைத் திற

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான
செயல்களில் ஈடுபடு
உன் உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வின் உயர்விடத்தில் இருப்பாய் நீ!

## வாய்ப்பூட்டு

வாய்ப்பூட்டு போடுவது நிமிர்ந்து அமர
வாய்ப்பூட்டு சிந்தனைக்கு வழி வகுக்க
வாய்ப்பூட்டு எண்ணங்கள் நிலைபெற
வாய்ப்பூட்டு பணிவு தலைதாழ்த்த
வாய்ப்பூட்டு திறந்து சிறந்ததைப் படித்தால்
வாயும் மலரும், வாழ்க்கையும் மலரும்.